


# பல்லாவரம் தொகுதியில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் மின்மாற்றிகள்!

## பல்லாவரம் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. மக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைக்கிறார்!

பல்லாவரம், ஏப்.12-

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பழைய பல்லாவரம், மலகானந்தபுரம், ஏரிக்கரை தெரு, வேம்புலி அம்மன் கோயில் தெரு, ராஜீவ் காந்தி நகர், சாரா நகர், நாகாத்தம்மன் கோயில் தெரு, வேம்புலி நகர், அனகாபுத்தூர், காமராஜர் சாலை, சீனிவாசபுரம், லக்ஷ்மி நகர், பொழிச்சலூர், மல்லி மாநகர், மகாலட்சுமி நகர், திரிசூலம், பூங்கா நகர், சாமி நகர் 2வது தெரு, ஜே.ஜே. நகர் ஆகிய பகுதிகளில் தொடர் குறைந்த மின்னழுத்தம் காரணமாக பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டதை தொடர்ந்து பொதுமக்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து வைத்த கோரிக்கையை ஏற்று ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் 100KVA, 63KVA மின்மாற்றிகள் டிரான்ஸ்பரங்கள் அமைக்கப்பட்டன .

அதைத்தொடர்ந்து 12-4-2025 அன்று காலை 9.00 மணி முதல் தொடர்ந்து மேற்கண்ட இடங்களில் அமைக்கப்பட்ட மின்மாற்றிகளை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு துவக்கி வைக்கிறார்.

அப்பொழுது மண்டல தலைவர்கள் மாமன்ற உறுப்பினர்கள் பகுதி கழகச் செயலாளர்கள் வட்ட கழகச் செயலாளர்கள் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

மதுரவாயல் தெற்கு பகுதி

# பாகப் பொறுப்பாளர்களின் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, ஏப்.12-

மதுரவாயல் தெற்கு பகுதி, பாகப் பொறுப்பாளர்களின் ஆலோசனைக் கூட்டம் குறித்து பகுதி செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு வருமாறு :

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் தெற்கு பகுதியில் அடங்கிய எட்டு வட்டங்களில் உள்ள 193 பாகங்களுக்கான பாக பொறுப்பாளர்களின் ஆலோசனைக் கூட்டம் இன்று (12.4.2025 - சனிக்கிழமை) மாலை 6.00 மணிக்கு காரம்பாக்கம் சமயபுரம் நகர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள ஜெ.வி.பி. மினி ஹாலில் நடைபெற உள்ளது.

அதுபோது கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படவிருக்கிறது.

எனவே இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பாக பொறுப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



மேயர் திருமதி ஆர்.பிரியா, நேற்று (11.04.2025) பெருநகர சென்னை மாநகராட்சி, மணலி மண்டலத்திற்குட்பட்ட பாடசாலை தெரு சென்னை நடுநிலைப்பள்ளியில் 2025–26ஆம் கல்வியாண்டிற்கு நடைபெறும் மாணவர் சேர்க்கை விவரங்கள் குறித்துப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, சேர்க்கைப் படிவத்தினை வழங்கினார். இந்த ஆய்வின்போது, மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், துணை ஆணையாளர்கள் வி.சிவகிருஷ்ணமூர்த்தி, (பணிகள்), கட்டா ரவி தேஜா, (வடக்கு வட்டாரம்), மண்டலக்குழுத் தலைவர்கள் ஏ.வி.ஆறுமுகம் (மணலி), எஸ்.நந்தகோபால் (மாதவரம்), மாமன்ற உறுப்பினர்கள் அ. சந்திரன், அ.தீர்த்தி, ஆர்.ஜி. ராஜேஷ் சேகர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

